எம்.சி.ஓ.பி எண்: 3712/2023 தேதி: 23.06.2025

மசா. : 2

பெயர் : செந்தமிழ் செல்வன்

த/பெ. : ராஜபாண்டியன்

வயது : 32

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசராணை</u>**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ19 மட்டும் தாக்கல் செய்கிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்கவரவில்லை. மனுதாரர் தரப்பில் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அவர் எங்கள் ஊர்காரர். விபத்து சமயத்தில் நான்இருசக்கரவாகனத்தை ஓட்டிச்சென்றுகொண்டிருந்தேன். அந்த இடத்தில் போதிய வெளிச்சம் இருந்ததா என்றால் வெளிச்சம் இல்லை,. வண்டியின் வெளிச்சம் தெரிந்தது. கார் எனக்கு பின்னால் இருந்து முன்னால் சென்றது. அந்த இடத்தில் பாதசாரிகள் கடக்கும் கோடு இருந்தது. சிக்னல் கிடையாது. நான் இருந்த இடத்திற்கும், விபத்து நடந்த இடத்திற்கும் இடையே 20 அடி இடைவெளி இருக்கும். எனக்கு முன்னால் விபத்து நடந்தது. நான் புகார் கொடுக்கவில்லை. விபத்து குறித்த குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்து உள்ளேன். எனக்கு தெரிந்தவர் என்பதால் பார்க்காத விபத்தை பார்த்ததாக மனுதாரருக்கு உதவும் நோக்கில் இழப்பீடு பெறவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.